அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 6

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

நாம் ஒரு நூலை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் படிக்கும்போது நற்கருத்துகள் தோன்றும். அக்கருத்துகள் எமது அறிவுக்கு இன்பம் பயக்கும். அதேபோல நற்பண்புடையோரது நட்பு பழகப்பழக மனத்துக்கு இனிமை தரும். ஒருவருடன் நட்புக்கொள்வது, அவரைக் கண்டதும் சிரித்துப்பேசி மகிழ்வதற்கல்ல. நாம் நட்புக்கொண்டிருப்பவர் அறத்தை மீறி நடக்கும்போது தவறைச் சுட்டிக்காட்டித் திருத்துவதே வலிமையான நல்ல நட்பாகும். உள்ளத்தில் நல்ல எண்ணம் இன்றி கண்டதும் சிரித்து மகிழ்வது நட்பு அல்ல. உள்ளத்தில் எழும் அன்பால் முகம் மலரச் சிரிப்பதே உண்மை நட்பாகும்.